# கட்டுவனில் 10 படை பலி; 7 புலிகள் வீரமரணம்
# இராணுவத்தின் சடலம் மக்கள் பார்வைக்கு!

(கட்டுவன்)

கட்டுவனில் நேற்றுக்காலை விடுதலைப்புலிகளுக்கும் இரா ணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் பத்து இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். பலர் காயமடைந் தனர். விடுதலைப் புலிகள் தரப்பில் நான்கு பெண்போரா ளிகள் உட்பட ஏழு போரா ளிகள் வீரமரணமடைந்தனர். விடுதலைப் புலிகளால் இறந்த இராணுவத்தினர் சடலம் ஒன் றும், பலரக ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

நேற்றுக் காலை 5.30 மணி யளவில கட்டுவனில் அமைந் திருந்த விடுதலைப் புலிகளின் காவல் அரணைக் கைப்பற்ற இராணுவம் முற்பட்டபோதே இந்த மோதல் ஏற்பட்டது. இந்த மோதல் நண்பகல் ஒரு மணிவரையும் நடைபெற்றது. இந்த பல மணி நேர மோத

(4ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka   பக்கங்கள் 04   விலை ரூபா: 4=00

# ஈழநாதம்

THE EELANAATHAM   மக்கள் தினசரி   PEOPLES DAILY

நாதம் 01   மார்கழி   (23 - 12 - 1990)   ஞாயிற்றுக்கிழமை   ஓசை 298

## அகதிகள் சட்டத்தை சீர்திருத்தக் கோரிக்கை

(பொட்ஸ்டாம்)

கிழக்கு ஐரோப்பாவில் இருந்தும், மூன்றாம் உலக நாடுகளி இருந்தும் பெருமளவான அகதிகள் 'படையெடுக்கக்' கூடும் என அஞ்சும் ஜேர்மனியில் 16 சமஷ்டி அரசுகளினதும்,(மாநிலங்கள்) உள்துறை அமைச் சர்கள் நாட்டின் தாராள மய தஞ்ச சட்டங்களை அவ சரமாக சீர்திருத்தம் செய்யவேண்டுமென கோரியுள்ள னர்.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

### கொண்டச்சிக்கும் - கஜுவத்தைக்கும் இடையில்

# புலிகளின்தாக்குதலுக்கு
# ஆறு இராணுவம் பலி

## ஆயுதங்கள் மீட்பு; இரு புலிகள் வீரமரணம்

(மன்னார்)

கஜுவத்தை இராணுவ முகாமிற்கும் கொண்டச்சி முகாமிற்கும் இடையில் ரோந்து சென்ற இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் வழி மடக்கித் தாக்கியதில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் முகாமிற்குள் ஓடிவிட்டனர். அவர்களிடம் இருந்த ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இம் மோதலில் இரண்டு புலிகள் வீரமரணம் அடைந்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.40 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது கொண் டச்சி இராணுவ முகாமில் இருந்து கஜுவத்தை இராணு வமுகாமிற்கு நடந்து சென்று கொண்டிருந்த இராணுவத்தி னரை விடுதலைபபுலிகள் வழி மடக்கித் தாக்கினர்.

இத்தாக்குதலில் ஆறு இரா ணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இறந்தவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தில் குண்டு வீச்சு

(மாங்குளம்)

மாங்குளம் சந்தியில், தகர்க் கப்பட்ட சிறிலங்கா இரா ணுவ முகாமுக்குச் சமீபமாக குண்டு வீச்சு விமானம் ஒன்று நேற்று முன்தினம் காலை 10 மணியளவில்ஐந்துகுண்டுகளை வீசியது. அதசமயம் மாங் குளம் சந்தியில் நின்ற பொது

(4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தால் தொழிலாளி வெட்டிக்கொலை

(கரம்பன்)

கரம்பன் பகுதியில் சிறி லங்கா இராணுவத்தினரால் சீவல் தொழிலாளி ஒருவர் வெட்டிக்கொல்லப்பட்டார். நேற்று முன்தினம் காலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டும் மழையிலும் குடாநாட்டில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் சிறிலங்கா இரா ணுவ முகாம் தகர்ப்பில் வீர மரணமடைந்த கரும்புலி லெப். கேணல் போர்க் உட் பட 62 போராளிகளுக்கான அஞ்சலி மற்றும் மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பின் வெற்றி விழா நிகழ்ச்சிகளும், அஞ்சலிக் கூட்டங்களும் குடா நாட்டின் பல்வேறு பகுதிகளி லும் நேற்று இடம்பெற்றன; நாள் முழுவதும் தொடர்ச்சி

(4ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா நகரில்
## மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே பயணிகள் நகருக்குள் அனுமதி

## பம்பைமடுவில் 2 மணிநேர மோதல்;
## இழப்புகளுடன் இராணுவம் திரும்பியது

# புலிகளின் தாக்குதலுக்கு

# ஆறு இராணுவம் பலி

## ஆயுதங்கள் மீட்பு; இரு புலிகள் வீரமரணம்

(மன்னார்)

கஜுவத்தை இராணுவ முகாமிற்கும் கொண்டச்சி முகாமிற்கும் இடையில் ரோந்து சென்ற இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் வழி மடக்கித் தாக்கியதில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் முகாமிற்குள் ஓடிவிட்டனர். அவர்களிடம் இருந்த ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இம் மோதலில் இரண்டு புலிகள் வீரமரணம் அடைந்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.40 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது கொண்டச்சி இராணுவ முகாமில் இருந்து கஜுவத்தை இராணுவ முகாமிற்கு நடந்து சென்று கொண்டிருந்த இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் வழி மடக்கித் தாக்கினர்.

இத்தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இறந்தவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பம்பைமடுவில் 2 மணிநேர மோதல்; இழப்புகளுடன் ராணுவம் திரும்பியது

(வவுனியா)

பாவற்குளத்தில் அமைந்திருக்கும் இராணுவ முகாமில், நேற்று நண்பகல் 12 மணியளவில் வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

பம்பைமடுச் சந்தியில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே இரண்டு மணிவரை இம் மோதல் நீடித்தது. இத் தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் முகாமுக்குத் திரும்பிச் சென்றனர். இராணுவ தரப்பில் குறிப்பிடத்தக்க சேதம் ஏற்பட்டதாயினும் அதுபற்றியவிபரம்தெரியவரவில்லை. ஆனால் அவ்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இரு மோதல்களில் 9 புலிகள் வீரமரணம்

(மன்னார்)

கஜுவத்தை முகாமிற்கும் கொண்டச்சி முகாமிற்கும் இடையில் நேற்றுமுன்தினம் நடந்த மோதலில் லெப். ஜோதிரவி, (இலந்தைக்குளம், நானாட்டான), சங்கிலியன் (நானாட்டான்) ஆகிய இரு விடுதலைப்புலிகள்வீரமரணம் அடைந்தனர்.

கட்டுவனில் நேற்று இடம் பெற்ற மோதலில் ஏழு புலிகள் வீரமரணம் அடைந்தனர். இவர்களில் நான்கு பெண்போராளிகளும் அடங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் வடக்கில் பலமான ஷெல் வீச்சு

(தெல்லிப்பளை)

கட்டுவன் பகுதியில் நேற்று நண்பகல்வரை நடைபெற்ற உக்கிர மோதலின் போது வீமன்காமம், டச்சு றோட், தெல்லிப்பளை, இளானை ஆகிய பகுதிகளை நோக்கி 200றக்கும் மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டன. இதனால் கிளானைப் பகுதியைச் சேர்ந்த திருமதி சின்னட்டி (வயது 60) பலியானார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பளையில் குண்டு வீச்சு; வயோதிபர் காயம்

பளை ரயில்நிலையம், சந்தைப்பகுதிகளை நோக்கி சிறிலங்கா விமானப்படை குண்டு வீச்சு விமானங்கள் குண்டுத்தாக்குதல் நடாத்தியதில் ஒருவர் காயமடைந்தார். சில கட்டடங்கள் சேதமடைந்தன.

நேற்று முற்பகல் 11.00 மணியளவில் இரண்டு சிறிலங்கா விமானப்படை குண்டு வீச்சு விமானங்கள் பலதடவை வட்டமிட்டு குண்டுகளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதிபொலிஸ்மா அதிபராக விஜயசேகரா பதவி உயர்வு

(கொழும்பு)

திருமலை மாவட்டத்தில், புலிகளின் கண்ணி வெடித்தாக்குதலில் மரணமடைந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றிச்சாட் விஜயசேகரா மரணத்தின் பின் பிரதிப்பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்த்தப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

---

ணுவ முகாமுக்குச் சமீபமாக குண்டு வீச்சு விமானம் ஒன்று நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் ஐந்து குண்டுகளை வீசியது. அதத ருணம் மாங்குளம் சந்தியில் நின்ற பொது

(4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தால் தொழிலாளி வெட்டிக்கொலை

(கரம்பன்)

கரம்பன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சிவல் தொழிலாளி ஒருவர் வெட்டிக்கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் காலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டும் மழையிலும் குடாநாட்டில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பில் வீரமரணமடைந்த கரும்புலி லெப். கேணல் போர்க் உட்பட 62 போராளிகளுக்கான அஞ்சலி மற்றும் மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பின் வெற்றி விழா நிகழ்ச்சிகளும், அஞ்சலிக் கூட்டங்களும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று இடம்பெற்றன.

### வவுனியா நகரில்

நாள் முழுவதும் தொடர்ச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே பயணிகள் நகருக்குள் அனுமதி

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் வைத்து மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வடபகுதி பிரயாணிகள் வவுனியா நகரப்பகுதி செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் அகதி முகாமில் அதிக அளவிலான வடபகுதி பிரயாணிகள் தங்கிச் செல்வதால், அங்கு இடப் பற்றாக்

### விலைவாசி ஏற்றம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது கண்டியில் பொலிஸ் தாக்குதல்

(கண்டி)

விலைவாசி, உயர்வு, அடக்குமுறை ஆகியவற்றைக் கண்டித்து ஆர்ப்பாட்டம், மறியல் ஆகியவற்றில் ஈடுபட முற்பட்டோர் மீது பொலிசார் தாக்குதல் மேற்கொண்டதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் இச் சம்பவத்தில் காயமடைந்தனர். சுமார் 300 பொலிசார்களைகளாலும், கால்

4 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு

## அரசு ஊடாகவே நிதிவழங்க ஈ. பி. டி. பி. கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வுப் பணிகளுக்கு சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஊடாகவே உதவி வழங்கப்படல் வேண்டும் என்று ஈ. பி. டி. பி யின் தூதுக்குழு பிரிட்டிஷ் தூதுவரைக் கேட்டுக் கொண்டது.

கடந்த 16ஆம் திகதியன்று பிரிட்டிஷ் தூதுவரை அவரது இல்லத்தில் சந்தித்த ஈ. பி. டி. பி. தூதுக்குழு இலண்டனில் புலிகளது பிரசாரம் மற்றும் நடவடிக்கைகளை நிறுத்துவது பற்றியும் வேண்டுகோள் விடுத்தது.

இவர்களுக்குப் பதிலளிக்கும் போது ஒரு கட்டத்தில் பிரிட்டன் அரசு ஏற்கனவே 38 கோடி ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களும், மருந்து வகைகளும் வழங்கியுள்ளதாக பிரிட்டிஷ் தூதுவர் கூறியுள்ளார்.

## வரிவிளம்பரம்

### ரதிவோச் வேக்ஸ்

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ்:- எமது ஸ்தாபனம் இல. 44, 46, கஸ்தூரியார் வீதியில்மீண்டும் 1-12-90முதல் இயங்கி வருகின்றது தவிர, இல.12, பொன்னையா வேலு, ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையிலும் தொடர்ந்தும் இயங்கிவரும் என்பதையும் எமது வாடிக்கையாளருக்கும், சகல மணிக்கூடு பாவனையாளருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம் (50 வருட காலநம்பிக்கைச்சின்னம் ரதிவோச் வேக்ஸ்) - நிர்வாகம்.

(B-1648)

### விற்பனைக்கு

தந்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டோ ரேடர்" இல. 250A பருத்தித்துறை வீதி, நல்லூர். "அரஞ்ஜவுளியகம்" 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(B-688)

### யாழ்ஸ் றெஸ்ரோறன்ற்

வாடிக்கையாளர்களே! முதலாம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (ஆரியகுளம்) எனும் முகவரியில் இயங்கிவந்த எமது றெஸ்ரோறன்ற் தற்போது இல.59, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்குகிறது என்பதை அறியத் தருகின்றோம். (200 யார் தூரத்தில்)

(B-1742)

**The Jaffna Education Centre**

யாழ்ப்பாணக் கல்வி நிலையம் (சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்) O/L. A/L. Spoken English, Shorthand Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியுமுண்டு.

(B, 1657)

## முதலாவது பிறந்த தின வாழ்த்து



அ. தெய்வீகன்

ஆவரங்காலைச்சேர்ந்த அருட்செல்வன் ஜெயந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் தெய்வீகன் தனது முதலாவது பிறந்த நாளை 23-12-90 அன்று சீரும் சிறப்புடன் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, பேரன்மார் பேர்த்திமார் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றார்கள்.

இ. அருட்செல்வம்
ஜெயந்தி
ஆவரங்கால்

(R-946)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தாயின் மடியில் | | மண்ணின் விடிவிற்காய் |
|---|---|---|
| 31 - 03 - 1973 |  | 23 - 11 - 1990 |

### வீரவேங்கை
### 'கப்டன் ரஷாத்'
### (சிவசுப்பிரமணியம்-சுரேஸ்குமார்)

(23-11-90 இல் மாங்குளம் இராணுவ முகாம் அழிப்பில் களப்பலியானவர்)

வேங்கைகளின் பாசறையில் - முன்னணியிற் திகழ்ந்தவனே திக்கெட்டும் புகழ்பரப்பி-வீரமறவனாய் நின்றவனே, தமிழன்னை மானங்காக்க, தரணியில் உதித்தவனே, தனக்கென வாழாத் தன்மையினால் ஈழவரை கவர்ந்தவனே, சிங்கள இனவெறி இராணுவத்திற்கு சிம்மசொப்பனமாய் திகழ்ந்தவனே, தங்கத் தமிழினத்தின் சீர்சிறப்பைகெடுப்பதற்கு உருவான ஸ்ரீலங்கா இராணுவத்தின் மாங்குளமுகாம் தகர்ப்பில், மாவீரர் தினமதிலே, மார்பினிலே குண்டேந்தி நின்ற வேளை கொடிய எதிரி அஞ்சியே மடிதல் கண்டு, ஆனந்தக்களிப்புடனே தமிழ் தாய் மடியினிலே, அவன் வீரத்தாலாட்டுப் பாடல் கேட்டு சங்கமமாகி வீர சொர்க்கம்புகுந்தாயே, நீ மீண்டும் எம்மனத்தில் வந்துதிக்க இறைவனை நாம் வேண்டுகிறோம்.

கணேசபுரம்,
கிளிநொச்சி.
(R-955)

அம்மா, அண்ணன்மார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை
மருத்துவபீடம்

## பரீட்சைகளின் திகதிகள்

மருத்துவபீட மூன்றாம் ஆண்டு (பரீட்சை பகுதி 2) 17-01-1991 இலும்
மருத்துவபீட இரண்டாம் ஆண்டு மீள் பரீட்சை 21-01-1991 இலும்

நடைபெறும்:

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட மாணவர்களுக்கு மூன்றாம் ஆண்டு (பகுதி 2) மருத்துவ பரீட்சையும் இரண்டாம் ஆண்டு மீள் பரீட்சையும் கொழும்பில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நடத்தப்படும். ஏனைய மருத்துவ மாணவர்கள் இந்தப் பரீட்சைகளுக்குக் கொழும்பில் தோற்ற முடியாது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலேயே தோற்ற வேண்டும்.

பதிவாளர்

(B-1749)

## ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தல்

1990 மே, யூன் இறுதிப்பரீட்சை எழுதிய மாணவர்கள் ஆய்வுக் கட்டுரைகளை யாழ்ப்பாண வளாகத்தில் சமர்ப்பிக்க முடியாதிருப்பின், அவைகளை கொழும்பிலுள்ள பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அலுவலகத்தில் 1991 பெப்ருவரி 15ஆம் திகதிக்கு முன்னராக சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு எடுத்து வருவதற்கான ஒழுங்குகள் செய்யப்படும்.

பதிவாளர்
(B.1757)

## லீலா காமன்ஸ்

பெண்களின் நவநாகரிக ஆடைகள் ஓடருக்குத் தைத்துக் கொடுக்கப்படும்.

குறிப்பு: பெண்கள் மிஸ்லின்ஸ் ஸ்தாபனத்தில் பணிபுரிந்த அதே ஊழியர்களே இப்புதிய இடத்தில் கடமையாற்றுகின்றார்கள் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

விலாசம்;
**லீலா காமன்ஸ்,**
இல. 220, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அருகாமை) (R-952)

## நன்றி நவிலல்


23-11-1990ல் சிவபதமடைந்த திரு.சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் இக்கட்டான சூழ்நிலையிலும் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை பிரசுரித்தவர்களுக்கும், மலர் மாலை, மலர் வளையங்கள் அணிவித்தவர்களுக்கும் இரங்கல் உரையாற்றியவர்களுக்கும், இறுதி யாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கும், யாழ்-மாவட்ட சிக்கனகடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும், உலர்வலய அபிவிருத்தி மன்ற உறுப்பினர்களுக்கும் ப.நோ.கூ. சங்கத்தினருக்கும், ஏனைய கூட்டுறவாளர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், எங்கள் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

10/12 ஆம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்

பிரிவால் துயருறும் தாய், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்

(R-956)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தாயின் மடியில் | | தாயகப் போரில் |
|---|---|---|
| 29-06-71 |  | 23-11-90 |

### செல்வன் கு. ஜெயரட்ணம்(நியூட்டன்)

மாவீரர் நாளிலே மாங்குளப் போரிலே மரணித்த மாவீரனே, உன் ஆத்மா சாந்தி அடைய அன்னை வேளாங்கன்னியை பிரார்த்திக்கின்றோம்.

ஐயா, அம்மா, அண்ணன், அக்கா
மாமன்மார்-மாமிமார், சித்தி, அப்பு, அம்மம்மா

இலக்கம் 178,
இந்திரஜித்து வீதி,
சந்தையடி வட்டக்கச்சி.

தகவல்:
க. குணசேகரன்
(R-919)

## 180-வதுநாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பிதழும்

| தாயகத்தில் | | தியாகத்தில் |
|---|---|---|
| 15 \| 05 \| 1970 |  | 25 \| 06 \| 1990 |

### வீரவேங்கை றதீஸ்
### (கிருஷ்ணபிள்ளை ஜெகநாதன்)
### (ஜெகன்)

ஆலமரம் போன்ற எம் குடும்பத்தில்
அகன்ற ஒளி விளக்காய் அர்த்தமித்த றதீஸா
ஈழத்தின் மானத்தை காத்திடவென்று
வேகத்தின் விந்தைகளை வீறுடனே பூண்டு
பொங்கி எழுந்திடும் புலிவீரர் வரிசையில்
புகுந்த களமே சாதனை வீரனாய் ஈட்டி
சங்கமமாகிய இன்று மூவிரண்டு மாதத்தில் நாம்
சமர்ப்பிக்கின்றோம் அஞ்சலிகள்.

மு. குறிப்பு: 25-12-1990 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது மகனின் அந்தியேட்டி கிரியைகளில் இயக்கத்தோழர்கள், உறுப்பினர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

''செல்வ இல்லம்''
மாலாவத்தை,
புலோலி மத்தி,
புலோலி.

குடும்பத்தினர்.

(R/945)

### சிந்தனைக்கு

ஆலோசனைகளை அள்ளி வீசிவிட்டு, சொன்னதன் விளைவுகளிலிருந்து பின்னர் தப்ப முயல்வது, மிக எளிதாகி விட்டது

— ஜவஹர்லால் நேரு

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 23-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2039 நிர்வாகபீடம்: 2703
த.பெ.எண் 85

# சுக்ளாவின் விஜயம் விக்கிரமாதித்த முயற்சி

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் வி.சி.சுக்ளா ஜனவரி மாதம் 29 ஆம் திகதி சிறிலங்காவிற்கு வர உள்ளதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் தொடங்கிய பின்னர் சிறிலங்கா வரும் முதல வது இந்திய அமைச்சர் வி.சி. சுக்ளா ஆகும். ஆட்சி கவிழ்க்கப்பட்ட வி.பி. சிங் அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் வருவதாக திட்டமிடப்பட்டிருந்த திகதிக்கு முன்னரே அரசாங்கம் கவிழ்ந்துவிட்டமையால் அவர் விஜயம் ரத்துச் செய்யப்பட்டது.

அண்மையில் சிறிலங்கா அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்டுள்ள மாற்றமும், அதன் புதிய உதவு முறைகளும் விருத்தியடைந்துவரும் இந்த வேளையில் சுக்ளாவின் வருகை குறிப்பிடக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

1987ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த ஒரு சூழ்நிலை இன்று சிறிலங்காவில் இல்லை. அதேபோன்று இந்தியாவிலும் அதை ஒத்த சூழ்நிலை இல்லை.

1987 ஆம் ஆண்டிற்கு முன்னர் மேற்குச் சார்ந்திருந்த சிறிலங்காவின் வெளியுறவுக் கொள்கை பெரும்பாலும் கிழக்குச் சார்ந்ததாக மாறிவிட்டது. சிறிலங்கா கிழக்கு சார்ந்த கொள்கையில் உறுதியாக உள்ளது என்பதற்கு சீனப் பிரதமரின் விஜயத்திற்காக கொடுக்கப்பட்ட முக்கியத்துவமும், அதனைக் காரணம் காட்டி இந்திய வெளிவிவகார அமைச்சரின் விஜயத்தைப் பின் போட்டமையிலும் இருந்தே தெரிந்து கொள்ளலாம்.

மேலும் சீனப் பிரதமரின் சிறிலங்கா விஜயம் அரசாங்கத்திற்கு புதிய கொள்கையையும் உச்சாகத்தையும் கொடுத்திருக்கும்என்பதிலும் சந்தேகமில்லை. அடுத்ததாக 1987 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்தது போன்று இந்தியா மீது இருந்த அச்சமும் தற்பொழுது சிறிலங்காவிற்கு இல்லை.

இந்தியாவை பொறுத்தும் 1987ஆம் ஆண்டிற்கு முற்பட்ட சூழ்நிலை இல்லை. சிறுபான்மையான ஒரு அரசாங்கம் ஆட்சியில் உள்ளதோடு இந்தியாவில் சாதி சமய வகுப்பு வாதப்பூசல்களும், பிரிவினைவாதப் பிரச்சினைகளும் மலிந்து விட்டன.

இந்த நிலையில், இலங்கையுடனான புதிய வெளியுறவுக் கொள்கை ஒன்றை அறிவித்துவிட்டு இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருகின்றார். அவர் அறிவித்த வெளிவிவகாரக் கொள்கையை அமுல் படுத்துவது போல் சில நடவடிக்கைகள் மூலம் காட்டவும் இந்தியா முற்பட்டுள்ளது.

அதேவேளை ஜே.வி.பி. இயக்கத்தின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இந்தியாவிற்குத் தப்பி ஓடி உள்ளார். இதனால் ஒரு புதிய சூழ்நிலை உருவாக்கவும் பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் கடந்த காலத்தில் இந்திய - இலங்கை அமைச்சர்கள் சந்திப்பின் போது பேசுவதற்கேனும் முதன்மை பெற்ற இலங்கைத் தமிழர் பிரச்சினை இம்முறை முக்கியம் பெறும் என எதிர்பார்க்க முடியாது.

# ஒருங்கிணைந்த படைப்பிரிவு

சட்டம், ஒழுங்கு பாதுகாப்பு பிரச்சினைகளைச் சமாளித்துக் கொள்வதற்காக மாநில நிலையில் ஒருங்கிணைந்த பாதுகாப்பு படைப் பிரிவு ஒன்றை அமைத்துக் கொள்ளுமாறு மத்திய அரசு மாநில அரசுகளைக் கேட்டுக் கொண்டிருப்பதாகமத்தியஉள்துறை அமைச்சர்சுபோத்கான் சகாப் கூறியுள்ளார்.

அரியானா மாநிலத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் தேசிய பாதுகாப்பு காவலர் படை போன்று இது செயற்படும்; பதட்டம் நிலவும் மாநிலங்கள் அனைத்திற்கும் மத்திய அரசு படைகளை அனுப்புவது சிரமமாக இருப்பதால் இந்தப் புதியபடை அமைக்கப்பட இருப்பதாக மேலும் கூறினார். குறிப்பாக வகுப்புக் கலவரத்தால் பாதிக்கப்படும் பகுதிகளில் பாரபட்சமற்றுச் செயற்படும் இந்தப் படையின் பராமரிப்புத் தொகையில் பெரும்பகுதியை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்றும் எஞ்சிய தொகையை வட்டியில்லாக் கடனாக மாநில அரசுகளுக்கு வழங்கும் என்றும் கூறினார்.

# புதிய பலம் பெறும் ஐரோப்பிய சமூக நாடுகள்!

மத்திய கிழக்கின் நெருக்கடிகளைத் தீர்த்து பாலஸ்தீனியர்களின் போராட்டத்திற்கு ஒரு தீர்வைத் தேடும் நோக்கில் மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பாக 'அனைத்துலக மாநாடு ஒன்று கூட்டப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் முன் மொழிய வேண்டும் என்று ஐரோப்பிய சமூக நாடுகளின் தலைவர்கள் அண்மையில் இத்தாலியின் ரோமாபுரியில் கூடியபோது முடிவு செய்துள்ளனர். அமெரிக்காவின் விருப்பு - வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு அதாவது அமெரிக்காவின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் பாதுகாப்புச் சபைக்கு இந்த தீர்மானத்தை எடுத்துச் செல்ல ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் இணக்கம் கண்டுள்ளனர். இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருப்பது சாதாரணமான விடயமல்ல.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அமெரிக்கச் சார்பு என்றும், சோவியத் சார்பு என்றும் உலகம் பிளவுபட்டுப்போக அமெரிக்கசோவியத் அரசுகளிடையே நிலவிய 'பனிப்போர்' (Cold war) பல்வேறு நாடுகளினதும் விவகாரங்களில் செல்வாக்குச் செலுத்தி வந்தது. சோவியத் அதிபராக மிக்கெய்ல் கொர்பசேவ் பதவி ஏற்றதனைத் தொடர்ந்து, 'பெரிஸ்த்ரோய்கா' என்றும் 'கிளாஸ்னொத்' என்றும் புகுத்தப்பட்ட சீர்திருத்தக் கொள்கைகளின் விளைவாக 'பனிப்போர்' ஏறத்தாழ முடிவுக்கு வந்தது எனலாம். பிளவுபட்டிருந்த ஜேர்மனிகள் ஐக்கியப்பட்டது. நாற்பது வருடங்களுக்கும் மேலாக நிமிர்ந்து நின்று பிளவுபடுத்திய பெர்லின் சுவர் தகர்க்கப்பட்டது. 'வார்சோ' என்ற ஒப்பந்தத்தால் கட்டுப்பட்டிருந்த அணி நாடுகள் 'ஆமாம்' போடும் நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டன. இதன் காரணமாக ஐரோப்பிய சமூகம் பலம் பெறும் நிலைமை தற்போது உருவாகி வருகின்றமையினையே மேற்படி தீர்மானம் எடுத்துக்காட்டுகின்றது எனக் கொள்ளலாம்.

அத்துடன் ஆறு மாதங்களாக சவுதி அரேபியப் பாலைவனங்களிலும், வளைகுடாக் கடற்பரப்பிலும் சண்டித்தனம் செய்ய முற்பட்டு நிற்கும் அமெரிக்கா தனது பலத்தைக் காட்டி ஈராக்கைப் பணியவைக்க எடுத்த முயற்சிகளில் இன்னமும் வெற்றியீட்டவில்லை. வளைகுடாப் பகுதியில் தனது இராணுவப் பிரசன்னத்தை அதிகரிப்பதன் மூலம் ஈராக் குவைத்திலிருந்து வெளியேறிவிடும் என அமெரிக்கா எதிர்பார்த்திருக்கலாம், ஆனால் அது நடைபெறவில்லை. 1968 இல் எகிப்துடன் நடந்த போரின் பின்னர் இஸ்ரேலியரால் ஆக்கிரமிக்கப்பட்ட காசாப் பாலைவனப்பகுதி, கோலான் மலைக்குன்றுப் பகுதிகள், ஜோர்தான் ஆற்றின் மேற்குக்கரைப்பகுதி என்பவற்றிலிருந்து இஸ்ரேலியர் வெளியேற்றப்பட்டால் குவைத்திலிருந்து தானும் வெளியேறுவதாக ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் அறிவித்தார்.

வளைகுடாப் பிரச்சினையில் அமெரிக்காவிற்கு ஆதரவாக ஐரோப்பிய சமூகத் தலைவர்கள் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்ற போதும், அடுத்தடுத்த தீர்மானங்களிலேயே பாலஸ்தீனப் பிரச்சினை பற்றியும், மத்திய கிழக்கு நெருக்கடி பற்றியும் பேசியிருப்பது மறைமுகமாக சதாம் ஹுசைனின் கோரிக்கையின் வெளிப்பாடே எனக் கொள்வது மிகையானதாகாது. இவ்வகையில் பாலஸ்தீன மக்கள் இதுகாலும் தொடர்ந்து வரும் போராட்டத்தின் வெற்றியுமாகும்.

இந்த வகையில் அமெரிக்கா குவைத்தினை விடுவிக்க ஒரு யுத்தம் நடாத்துமா என்பது பற்றிய கேள்விகளுக்கு இன்னமும் விடை கிடைத்து விடவில்லை. ஈராக்கில் தடுத்து வைக்கப்பட்டு பணயமாக்கப்பட்ட கைதிகள் அனைவரும் எதிர்வரும் நத்தார் பண்டிகைக்கு முன்பாக நாடு திரும்பலாம் என்று சதாம் ஹுசைன் அறிவித்து அவரவர் தத்தம் நாடுகளுக்குத் திரும்பும் ஏற்பாடுகளும் துரித கதியில் நடைபெறுகின்றன. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் பக்தாத் விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி சதாம் ஹுசைனைச் சந்திக்கவும், ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸ் வாஷிங்டனுக்கு விஜயம் செய்து ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ்ஷைச் சந்திக்கவும் இதன் மூலம் பேச்சுவார்த்தைகளுக்கான கதவு திறக்கப்படலாம் என்றும் நம்பப்படுகின்றது. ஆனால் இந்த விஜயங்களுக்கான திகதிகளைத் தீர்மானிப்பதில் இன்னமும் இழுபறி நிலையே தொடர்கிறது.

இது போர் மூளும் சூழலைத் தோற்றுவிக்குமா எனனும் அச்சத்தை அதிகரிப்பதாக கருதப்படுகின்றது. இதற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் ஈராக்கிய பாதுகாப்பு வட்டாரங்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களும் பொது மக்களைப் பாதுகாக்கும் ஏற்பாடுகள் பற்றிய ஒத்திகைகளும், ஈராக் போரின் மீதே நாட்டம் கொண்டிருப்பதைக் காட்டுவதாக அமெரிக்கத் தரப்பில் குற்றம் சாட்டப்படுகின்றது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கரின் வருகைக்கு டிசம்பர் 12 ஆம் திகதி என நிர்ணயித்த ஈராக்கின் செயலை அமெரிக்கா நிராகரித்தது. பேச்சுவார்த்தை தொடங்க முன்பு பணயக்கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என அமெரிக்கா தெரிவித்தது. நத்தார் பண்டிகைக்கு முன் பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவர் என எதிர்பார்த்து ஜனவரி மூன்றாம் திகதிக்குப் பின்னரே பேச்சுவார்த்தை என அறிவித்திருக்கும் அமெரிக்காவிற்கு ஈராக்குடன் பேச்சுவார்த்தை நடாத்துவதில் அக்கறையில்லை என்று ஈராக் குற்றஞ் சாட்டியுள்ளது. வளைகுடாவில் போருக்கான சூழ்நிலையை உருவாக்க சகல ஏற்பாடுகளையும் அமெரிக்கா மேற்கொண்டு வருகின்றது என வளைகுடாவிற்கான அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரியும் தெரிவித்திருக்கின்றார்.

ஆக பரஸ்பர குற்றச்சாட்டுகளின் மூலம் பதட்டம் அதிகரித்து 'போர் அபாயம்' ஏற்பட்டுவரும் வேளையிது.

இதனிடையில் அரபுப் பிரதேசத்திலிருந்து இஸ்ரேலியரும், சைப்பிரசிலிருந்து துருக்கியரும், லெபனனிலிருந்து சிரியர்களும் வெளியேறுவது பற்றிக் கொள்கையளவில் இணக்கம் கண்டபின்னர், குவைத்திலிருந்து ஈராக்வெளியேறுவது பற்றி பேசலாம் என்று உலக சமாதான சபை ஆலோசனை தெரிவித்திருக்கின்றது.

இவ்வாறாக அதிகரிக்கும் நெருக்கடிகளால் வளைகுடாவில் போர் மூளுமா? இல்லையா என்னும் கேள்விக்கு கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக விடைகிடைக்காமல் உலக மக்களும், அரசுத் தலைவர்களும் திண்டாடும் நிலை இன்னமும் சில காலத்திற்கு தொடரும் என்றேஎதிர்பார்க்கலாம்.

# போர் முஸ்தீப்பில் 5000 அமெரிக்கர் பலி

## —சதாம் ஹுசைன்

(பெண்டகன்)

வளைகுடாப் போர்முஸ்தீப்புகளில் அமெரிக்கா இதுவரையில் 5000 இராணுவ வீரர்களை இழந்துள்ளதால் அமெரிக்க ஜனாதிபதி புஷ் பதவி விலகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக நிக்கோசியாவில் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் கூறியிருக்கின்றார்.

குவைத்திலிருந்து வெளியேற இன்னமும் மறுப்புத் தெரிவித்துவரும் ஈராக் ஜனாதிபதி தமது நாட்டுமக்களைப் போருக்குத் தயார் படுத்தியும் வருகின்றார். சோவியத்தின் வெளியுறவு அமைச்சர் எட்வேர்ட் ஷெவர் நாட்சேயின் முடிவினால் வளைகுடா தொடர்பான சோவியத் கொள்கையில் மாற்றம் ஏதும் இல்லை என்று சோவியத் அதிபர் கொர்பசேவ் கட்டாறில் கூடும் வளைகுடா தொடர்பான ஒத்துழைப்புக் கூட்டத்திற்கு செய்தி அனுப்பியுள்ளார்.

இதனிடையில் 'சரடோவா' என்னும் அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பலில் ஏற்பட்ட விபத்தில் இரு மாலுமிகள் மரணமடைந்துள்ளனர். இருபத்திநான்கு பேர் காணாமல் போய்விட்டனர் என்றும் அமெரிக்க கடற்படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது. எண்ணிக்கை தெரியாத மாலுமிகள் பலர் இன்னமும் கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பதாகவும், எழுபத்து நான்குபேர் காப்பாற்றப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கரையிலிருந்த கப்பல் ஒன்றிலிருந்து விமானந்தாங்கிக் கப்பலுக்கு படையினர் ஏற்றிச் செல்லப்பட்டபோது விபத்துஏற்பட்டதாக தெரியவருகின்றது.

# மாணவர் எழுச்சி தினம்

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் மத்தியில் விழிப்புணர்வையும், பொறுப்புணர்வையும் தூண்டி வளர்த்தவரான மேஜர் முரளியின் நினைவு தினமும், மாணவர் எழுச்சி தினமும், இன்று பிற்பகல் மூன்று மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. இந் நிகழ்ச்சியில் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் தமது மாணவர்களுடன் கலந்து கொள்ளுமாறு தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் அறிக்கையொன்றின் மூலம் கோரியுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் தென் தமிழீழ மக்களின் இன்னல்களுக்கு நிவாரணம் வழங்க தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கான ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளது.

# முஸ்லிம் ஊர்காவற் படையால் வாழைச்சேனையில் 9 தமிழர் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம்
வாழைச்சேனையில் வீடுகளில்
இருந்தவர்களை முஸ்லிம் ஊர்
காவல் படையினர் வெட்டிக்
கொலை செய்துள்ளனர். இவ்
விதமாக ஒன்பது ஆண்கள்
கொல்லப்பட்டிருப்பதாக தக
வல்கள் தெரிவிக்கின்றன அவர்
களில் மூவரின் பெயர் விபர
ங்கள் கிடைத்துள்ளன.

ஐந்து பிள்ளைகளின் தந்தை
யான 37 வயது நிரம்பிய நல்ல
தம்பி கந்தசாமி (புதுக்குடியி
ருப்பு, வாழைசசேனை) 27
வயதான ஆறுமுகம் நடராசா
(பேத்தாலை வாழைச்சேனை)
இளம் குடும்பஸ்தரும் ஒரு
குழந்தைக்குத் தந்தையான
நல்லதம்பி, பாலையா (புதுக்
குடியிருப்பு, வாழைச்சேனை)
ஆகியோருடன் மேலும் அடை
யாளம் காணப்படாத ஆறு
பேரும் கொல்லப்பட்டுள்ள
னர்.

★ பிந்திய செய்தி

## கடலில் மூழ்கி மாண்ட கடற்படையினர் 17 ஆக உயர்வு

இஸ்ரேலின் கைபா துறை
முகத்திலிருந்து சுமார் நூறு
மாலுமிகளை ஏற்றிக்கொண்டு
அமெரிக்க விமானந் தாங்கிக்
கப்பலான 'சரடோகா'வை
நோக்கிச் சென்ற சிறிய கப்
பல் விபத்துக்குள்ளானதில்
பதினேழு மாலுமிகள் கொல்
லப்பட்டுள்ளனர். எழுபத்தி
ரண்டு பேர் மீட்கப்பட்டதா
கவும் ஏனையோர் காணாமல்
போயிருப்பதாகவும் அறிவிக்
கப்பட்டிருக்கிறது.

## தென் ஆபிரிக்க தமிழரை எவரும் கவனிப்பதில்லை

- சுப்பிரமணியசுவாமி

(சென்னை)

தென்னாபிரிக்காவில் தமி
ழர்கள் வேதனை அனுபவிக்
கிறார்கள். அவர்களைப்
பற்றி எவரும் கவனிப்பதாக
இல்லை. இலங்கையிலும்,
பிஜிலும் தமிழர்கள் வாழ்
கிறார்கள். தமிழர்கள் எங்கு
வேதனை அனுபவிக்கிறார்
களோ அங்கெல்லாம் அவர்
களுக்கு நீதி கிடைப்பதை
இந்திய அரசாங்கத்தின் தாரி
மீக நிர்ப்பந்தத்தின் மூலம்
நான் உறுதிப்படுத்த முயற்
சிப்பேன் இவ்வாறு கூறியுள்
ளார் மத்திய வர்த்தகத்துறை
அமைச்சர் டாக்டர் சுப்பிர
மணியம்சுவாமி.

மேலும் அவர் கூறுகையில்
அரசாங்கத்தின் நடவடிக்கை
யைப் பொறுத்திருந்து பாருங்
கள். பேச்சுக்களை நம்பவேண்
டாம் என தெரிவித்துள்ளார்.

## மட். 2500 மீன்பிடிப் படகுகள் 50 வீதத்திற்கு மேல் சேதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்
தில் சுமார் இரண்டாயிரத்து
ஐநூறு படகுகள் மீன்பிடித்
தொழிலில் ஈடுபடுத்தப்பட்டி
ருந்தன. இவற்றில் ஐம்பது
சதவீதத்திற்கும் மேலான பட
குகள் ஜூனில் சண்டை
ஆரம்பித்த பின்னர் படையி
னரால் நாசமாக்கப்பட்டுள்
ளன. இத்துடன் பாதுகாப்பு
காரணத்தைக்காட்டி வாவி
யில் மட்டுப்படுத்தப்பட்ட
நேரமே மீன்பிடிக்க அனுமதிக்
கப்படுகிறது. இவற்றால் மட்
டக்களப்பு மீனவர்கள் பெரி
தும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்

## வெற்றி ஒவ்வொன்றும் போராட்ட வளர்ச்சிப்படிகள் -ராஜன்

(யாழ்ப்பாணம்)

"சிறிலங்கா இராணுவத்
திற்கு எதிரான விடுதலைப்
புலிகளின் ஒவ்வொரு வெற்றி
கரமான தாக்குதல்களும்
வெறுமனே இராணுவ ரீதி
யான வெற்றிகள் அல்ல.
இவ்வாறான வெற்றிகள் அர
சியல், பொருளாதார, வர
லாற்று ரீதியான தமிழீழ விடு
தலைப் போராட்டத்தின்
வளர்ச்சிப் படிகள்" இவ்வாறு
நேற்று நல்லூர் கந்தசுவாமி
கோயில் மைதானத்தில் நடை
பெற்ற மாங்குளம் தகர்ப்பில்
வீரமரணமடைந்த கரும்புலி
லெப். கேணல் போர்க் உட்
பட 62 போராளிகளின் அஞ்
சலி மற்றும் மாங்குளம் தகர்
ப்பின் வெற்றிவிழாக கூட்டத்
தில் கலந்துகொண்டு உரை
நிகழ்த்திய யாழ். மாவட்ட
அரசியல் பொறுப்பாளர் திரு.
ராஜன் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் அவர்
தொடர்ந்து பேசுகையில்
எமது தீர்க்க தரிசனமான
ஒவ்வொரு நடவடிக்கைக
ளுமே எமது தேசிய விடுத
லைப் போராட்டத்தை சர்வ
தேச அரங்கிற்கு எடுத்துக்
காட்டியது. அதனாலேயே
எமது விடுதலைப் போராட்
டத்தை எந்த சக்தியாலும்
வெற்றிகொள்ள முடியாது
என்றும் எமது விடுதலைப்
போராட்டம் நிச்சயம் வெற்றி
பெறும் என்றும் அகில உலக
மூமே நம்புகின்றன. என்றும்
அவர் தெரிவித்தார்.

கொட்டும் மழையிலும் ஆயி
ரக்கணக்கான மக்கள் கலந்து
கொண்ட இக்கூட்டத்தில் யாழ்
மாவட்ட மகளிர் முன்னணி
பொறுப்பாளர் செல்விநிசாந்தி
பேசுகையில் உலக அரங்கில்
இதுவரை எந்த ஒரு விடு
தலைப் போராட்டத்திலும்
இல்லாத அளவுக்கு தமிழீழ
விடுதலைப் போராட்டத்தில்
பெண்கள் பெரியளவிலான
சாதனைகளைப் படைத்து
வருகின்றனர் என்று கூறினார்

இக்கூட்டத்தில் வலிகிழக்கு
அரசியல் பொறுப்பாளர் திரு.
சங்கீதன், யாழ். மாவட்ட
பிரசார பொறுப்பாளர்
திரு ஆஞ்சநேயர், விடுதலை
புலிகள் மக்கள் முன்னணி
பிரமுகர் செங்கதிர் மூத்த
உறுப்பினர் திரு. தேவர்
ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

### மேஜர் முரளி

## புலிகளின

கள் போக மீதமுள்ளவர்கள்
காயமடைந்தவர்களைத் தூக்
இக் கொண்டு முகாமிற்கு ஓடி
விட்டனர். இவ்விரு முகாம்
களுக்கும் இடையில் ஒரு மைல்
இடைத்தூரம் என்பது குறிப்
பிடத்தக்கது.

இத்தாக்குதல் மன்னார்
மாவட்டத்தில் சஜுவத்தை
இராணுவமுகாம் தகர்ப்பின்
போது வீரமரணமடைந்த
ப்புலிகளின் 6 ஆம் மாத நினை
வாக மேற்கொள்ளப்பட்ட
தாக விடுதலைப்புலிகளின்
செய்திக் குறிப்பொன்றில்

## ஆர்ப்பாட்ட

களாலும்பட்டிதனாலும்ஆர்ப்
பாட்டக்காரரை விரட்டிவிரப்
டித் தாக்கியுள்ளனர். கண்டி
யில் தலதாமாளிகைக்குசென்று
விட்டுத் திரும்பிய கம்யூ
னிஸ்ட் கட்சி முக்கிஸ்தர்
களான திரு பெர்னாட்
சொய்ஸா, திரு கே.பி சில்வா,
திரு. ராஜா கொல்லுரே ஆகி
யோர் மறியல் ஆர்ப்பாட்டம்
செய்ய முற்பட்ட போதே
மேற்படி சம்பவங்கள் இடம்
பெற்றிருக்கின்றன.

## பம்பைமடுவில்

விடத்தில் இருந்து கோல்சர்-1
ஏ. கே. மகசீன் -3, ஐ எம்.
ரவைகள் - 90 என்பன விடுத
லைப் புலிகளால் கைப்பற்றப்
பட்டுள்ளன.

## இரத்ததானமும் சிரமதானமும்

மாங்குளம்இராணுவமுகாம்
தாக்குதலின் வெற்றிநாளை
யொட்டி மறுமலர்ச்சிக் கழகத்
தின் ஏற்பாட்டில் யாழ். பல்
கலைக்கழக மாணவர்கள்
நேற்று யாழ். போதனாவைத்
தியசாலைக்குச் சென்று இர
த்ததானம் வழங்கினர்.

அதேவேளை மேஜர் முர
ளியின் நினைவு நாளாகிய
இன்றையதினம் மறுமலர்ச்சிக்
கழகத்தின் ஒழுங்கில் யாழ்
பல்கலைக்கழக மாணவர்கள்
யாழ். போதனா வைத்திய
சாலையில் சிரமதானம் செய்
யவுள்ளனர்.

## மட்டுப்படுத்தப்பட்ட

குறை ஏற்பட்டுள்ளதாம்.
இதை அடுத்து மிகக் குறைந்
தளவிலான பிரயாணிகளே
வவுனியா நகரப் பகுதி செல்
வதற்கு இராணுவத்தினரால்
அனுமதி வழங்கப்படுகிறது.

கடந்த 18ஆந் திகதி பூந்
தோட்டம் பகுதி இராணுவத்
தினரால் திருப்பி அனுப்பி
வைக்கப்பட்ட நூற்றுக்கணக்
கான வடபகுதி பிரயாணி
கள், சாந்தசோலை என்னு
மிடத்தில் வீதிகளிலும், குடி

## இராணுவ. மரியாதை

திருமலையில் புலிகளின்
தாக்குதலால் மரணமடைந்த
மேஜர் ஜெனரல் லக்ஷ்மன்
விஜயரெட்ணாவின் மரணச்
சடங்குகள் நேற்று காலையில்
அரசமரியாதைகளுடன் நடை
பெற்றன.

## பனையில்

வீசின இக்குண்டு வீச்சுத்
தாக்குதலில் வீதியால் சென்று
கொண்டிருந்த எஸ். சண்முக
தாஸ் (வயது 50) என்பவர்
காயமடைந்தார். இப்பகுதி
யில் இருந்த சில கட்டடங்
கள் சேதமடைந்தன. இப்ப
குதி மக்கள் பதுங்கு குழிக
ளில் தஞ்சமடைந்திருந்தமை
யால் உயிரிழப்புக்கள் தவிர்க்
கப்பட்டன. (க)

## இரு

குவர். அயித்தா (சுகுணராணி
கந்தையா, அரசடி. சாவகச்
சேரி), ஆசா, ரமா, ரதிகலா,
சாம்சன் (செல்வநாயகம்)
செல்வச்சந்திரன் (ஏழாலை
வடக்கு, ஏழாலை) ஸ்ராலின்
(துரைரட்ணம் பகிரதன்
170/2 கண்டிறோட் யாழ்ப்
பாணம்) அலன் ) குருசாமி சிவ
ராசா - ஸ்வமடு முல்லைத்
தீவு) ஆகியோரே வீரமரண
மடைந்தவர்களாவர் இவர்கள்

ப்பின் வெற்றிவிழாக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ராஜன் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் எமது தீர்க்க தரிசனமான ஒவ்வொரு நடவடிக்கைகளுமே எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை சர்வதேச அரங்கிற்கு எடுத்துக்

## மேஜர் முரளி ஞாபகார்த்த படிப்பகம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளராகப் பணியாற்றிய வேளையில் வீரமரணமடைந்த மேஜர் முரளியின் ஞாபகார்த்தமாக படிப்பகமும், சிறுவர் பாடசாலையும் திறந்து வைக்கப்படவுள்ளன. இன்று கொக்குவில் பொற்பதி வீதியில் மேஜர் முரளியின் தாயாரினால் இப்படிப்பகமும் சிறுவர் பாடசாலையும் திறந்து வைக்கப்படும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் யாழ். மாவட்டப் பிரிவு மேற்கொண்டிருக்கிறது.

காயமடைந்தவர்களைத் தூக்கிக் கொண்டு முகாமிற்கு ஓடிவிட்டனர். இவ்விரு முகாம்களுக்கும் இடையில் ஒரு மைல் இடைத்தூரம் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதல் மன்னார் மாவட்டத்தில் சலாவத்தை இராணுவமுகாம் தகர்ப்பின் போது வீரமரணமடைந்த புலிகளின் 6ஆம் மாத நினைவாக மேற்கொள்ளப்பட்டதாக விடுதலைப்புலிகளின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆயுதங்கள் மீட்பு

இத்தாக்குதலின்போது இராணுவத்தினரிடம் இருந்து பல ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

- ★ ஏ.கே. எல். எம். ஜி. - 1
- ★ ரம் மகசீன் - 4
- ★ லிங் - 375
- ★ ஏ கே. எல். எம். ஜி கோல்சர் - 2
- ★ ரீ. 56-1 ரகதுப்பாக்கி-01
- ★ ரீ. 56 ரகதுப்பாக்கி - 01
- ★ ரீ 56-2 ரகதுப்பாக்கி-01
- ★ ரீ. 56 மகசின் - 12
- ★ ஐ. எம். ரவைகள் - 1350
- ★ ஜ ஆர் கிரனைட் - 03
- ★ பைனட் - 01

என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் ஆகும்.

## மரண அறிவித்தல்

### திருமதி தமயந்தி சிறிரவீந்திரா

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி தமயந்தி சிறிரவீந்திரா 19-12-90 அன்று காலமானார். இவர் சிறிரவீந்திராவின் (பல் கட்டுனர் பேராதனைப் பல்கலைக் கழகம்) அன்பு மனைவியும், திரு. திருமதி குலசிங்கத்தின் (இளைப்பாறிய கணக்குப் பரிசோதகர்) அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. இராசரெத்தினம் (காணி அபிவிருத்தி அதிகாரி), திருமதி இராசரெத்தினம் ஆகியோரின் மருமகளுமாவார். இவரின் ஈமக்கிரியைகள் 23-12-90 இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

''சிவஸ்தன்''
கொக்குவில் மேற்கு,

தகவல்
கு. இந்திரன்.

(B/1763)

க்னான திரு பெர்னாட் சொய்ஸா, திரு கே.பி சில்வா, திரு. ராஜா கொல்லூரே ஆகியோர் மறியல் ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்ட போதே மேற்படி சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

### பம்பைமடுவில்

விடத்தில் இருந்து கோல்சர்-1 ஏ.கே. மகசீன்-3, ஐ எம். ரவைகள் - 90 என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பாவற்குளம் இராணுவ முகாமுக்கு பின்வாங்கிச் செல்கையில் ஒரு பொதுமகனை சுட்டுக் கொன்றுள்ளனர். இத்தாக்குதல் இடம்பெற்ற வேளை பம்பைமடுவைச் சேர்ந்த '75 குடும்பங்கள் இடாச்சூரி பாடசாலைக்கு இடம்பெயர்ந்தன.

பின்னர் பம்பைமடு, நெளுக்குளம் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதலை இராணுவம் மேற்கொண்டது. இதேவேளை காமினி மகா வித்தியாலயம் மற்றும் ஜோசப் இராணுவ முகாம்களில் இருந்து மருக்காரம்பளை, தாண்டிக்குளம் பகுதிகளுக்கு குறிபார்த்து எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. பம்பைமடுப் பகுதியை சுற்றி நீண்ட நேரமாக ஹெலிகொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

### கட்டுவனில்

லின் பின்னர் இராணுவத்தினர் தமக்கு ஏற்பட்ட பெரும் இழப்பைத்தொடர்ந்து முகாம் திரும்பினர்.

இந்த மோதலில் இராணுவத்தினரின் ஒரு சடலம் புலிகளால் மீட்கப்பட்டுள்ளது. இச்சடலம் இன்று மக்களின் காட்சிக்கு வைக்கப்படவுள்ளது. அத்தோடு பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

- ★ ஏ.கே எல்.எம்.ஜி - 01
- ★ ரம் மகசீன் - 01
- ★ லிங் - 575
- ★ ரீ 56-1 ரகதுப்பாக்கி -01
- ★ ரீ 56-11 ரகதுப்பாக்கி-01
- ★ ரீ 56 ரகதுப்பாக்கி -01
- ★ ஏ கே. மகசின் -07
- ★ 203 பிஸ்டல் (டொங்கரன் -01
- ★ 40 எம்.எம் செல் -05
- ★ ஐ எம். ரவைகள் - 1375
- ★ ஜி பி எம்.சி.லிங் -932
- ★ டேட்டோ ரவைகள்-520
- ★ புகைக் குண்டு -01
- ★ ஜி.பி.எம்.ஜி.பெரல் -01

மட்டுப்படுத்தப்பட்ட குறை ஏற்பட்டுள்ளதாம். இதை அடுத்து மிகக் குறைந்தளவிலான பிரயாணிகளே வவுனியா நகரப் பகுதி செல்வதற்கு இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்படுகிறது.

கடந்த 18ஆம் திகதி பூந்தோட்டம் பகுதி இராணுவத்தினரால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான வடபகுதி பிரயாணிகள், சாந்தசோலை என்னுமிடத்தில் வீதிகளிலும், குடிசைகளிலும் தங்கியிருந்ததை அவதானிக்க முடிந்தது. (தி)

### அகதிகள்

இந்த வருடம் ஜேர்மனியில் இட்டத்தட்ட இரண்டு இலட்சம் அகதிகள் அரசியல் தஞ்சம் கோரியிருக்கிறார்கள். இது கடந்த வருடத்தைவிட ஆயிரம் அதிகமானதாகும்

கிழக்கிற்கும், மேற்கிற்கும் இடையிலான செல்வந்த இடைவெளி, கிழக்கு ஐரோப்பாவின் பயண ஏற்பாடுகளில் உள்ள தாராளத் தன்மை, ஆசிய ஆபிரிக்க நாடுகளில் தொடரும் நெருக்கடிகள் மேலும் அகதிகள் படையெடுப்புக்கே வழிவகுக்கும். இதனால் தஞ்ச சட்டங்களை அவசரமாக சீர்திருத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது.

### இராணுவத்தால்

கரம்பன் பகுதிக்கு தமது தொழிலை மேற்கொள்ளச் சென்ற நாரந்தனை மேற்கு அண்ணா வீதியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான சுவக்கி (வயது 45) என்பவரை

இப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் அவரது கத்தியாலேயே பல துண்டுகளாக வெட்டிக் கொலை செய்துள்ளனர். (இரத்தம் தோய்ந்த நிலையில் கத்தியும் இவரருகில் காணப்பட்டது.

மாலையில் இவரைத் தேடிச் சென்ற உறவினர்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்த இவரது உடலை மீட்டு வந்தனர் (ச)

### மாங்குளத்தில்

மக்கள் காயம் எதுவுமின்றித் தப்பிக்கொண்டனர்.

மாங்குளம் சந்திக்குச் சுமார் அரை மைலுக்கு அப்பாலும் சனசஞ்சரமற்றகாட்டு பகுதி வீதியில் குண்டொன்று வீசப்பட்டது. இதனால் வீதியோரமாகப் பாரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளது.

கப்பட்டன. (ச)

இரு

குவர். அயித்தா (சுகுணராணி கந்தையா, அரசடி சாவகச்சேரி), ஆசா, ரமா, ரதிகலா, சாம்சன் (செல்வநாயகம்) செல்வச்சந்திரன் (ஏழாலை வடக்கு, ஏழாலை) ஸ்ராலின் (துரைரட்ணம் பகிரதன் 170/2 கண்டிறோட் யாழ்ப்பாணம்) அலன்) குருசாமி சிவராசா - விஸ்வமடு முல்லைத்தீவு) ஆகியோரே வீரமரணமடைந்தவர்களாவர்இவர்கள் அனைவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### வலிகாமம்

25ற்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன. இதேவேளை இந்தப் பகுதிகளைவட்டமிட்ட ஹெலி காலை 8 30 மணிமுதல் தொடர்ச்சியான கலிபர் தாக்குதலை நடாத்தியது. மாலையில் அவ்ரோ விமானம் ஒன்று இத்தாக்குதலின் போது காயமடைந்த இராணுவத்தினரையும், இறந்தவர்களையும் பல தடவைகள் பலாலியில்இறங்கி எடுத்துச் சென்றது. (ச)

### கொட்டும் மழை

சியாக மழை கொட்டிய வண்ணம் இருந்த போதிலும் குடாநாட்டின் பல்வேறு இடங்களில் உள்ள முக்கிய சந்திகள், பொதுஇடங்களில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டபந்தல்களில் மாங்குளம் முகாம் தகர்ப்பில் வீரமரணமடைந்த போராளிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

வீதிகள் அலங்கரிக்கப்பட்டு அலங்காரப் பந்தல்களில் போராளிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

மழை தொடர்ச்சியாக இருந்த போதிலும் குடைகளை ஏந்தியபடி பெரும் திரளான மக்கள் அஞ்சலி செலுத்திச் செல்வதை அவதானிக்க முடிந்தது.

அதேவேளை வன்னி மாவட்டத்தில் மல்லாவியில் நேற்றுக் கொண்டாடப்படவிருந்த இந்நிகழ்ச்சி பின்போடப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணங்களால் மேற்படி விழா பின்போடப்பட்டதாகவும், சிரமத்தைப் பாராது ஒத்துழைப்புவழங்கிய பொதுமக்களுக்கு வன்னி மாவட்ட விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.